2025 – நவம்பர் மாதம் – 06 ஆம் தேதி வியாழக்கிழமை
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 344/2023*

*2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 06–ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 3, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W3, செந்தில்முருகன் |
| தந்தையார் பெயர் | : | ராஜகோபால் |
| ஊர் | : | பெரம்பலூர் |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | பதிவறை மேலாளர் |
| வயது | : | 36 |

**தேதி: 06.11.2025.**

நான் தற்பொழுது பெரம்பலூர் SPT மருத்துவமனையில் பதிவறை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள விபத்து பதிவேடு, காயச்சான்று, மருத்துவமனை விடுவிப்பு சான்று ஆகியவற்றின் உண்மை நகல்களைத் தாக்கல் செய்கிறேன். 14.09.2023–ஆம் தேதி எங்கள் மருத்துவமனையால் வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டின் கார்பன் நகலைத் தாக்கல் செய்கிறேன். அது **மூ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 14.09.2023–ஆம் தேதி எங்கள் மருத்துவமனையால் வழங்கப்பட்ட காயச்சான்றிதழின் உண்மை நகலைத் தாக்கல் செய்கிறேன். அது **மூ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுதாரர் 01.07.2024 முதல் 03.07.2024–ஆம்தேதி வரை எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்குண்டான மருத்துவ சிகிச்சை விடுவிப்பு அறிக்கையின் உண்மை நகலைத் தாக்கல் செய்கிறேன். அது **மூ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

மூ.சா.ஆ.5 விடுவிப்பு அறிக்கையில் ஏற்கனவே மனுதாரரின் வலது காலில் பொருத்தப்பட்டிருந்த பிளேட்டை நீக்கி அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எலும்பு இணைப்பு ஏற்பட்ட பின்னர்தான் பொருத்தப்பட்ட பிளேட் நீக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். 2 வருடங்களுக்கு முன்பு பொருத்தப்பட்ட பிளேட்டை நீக்குவதற்காகதான் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்திற்கு முன்னரே ஏற்பட்ட எலும்பு முறிவிற்காகதான் மேற்படி அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 மருத்துவ கட்டண இரசீதுகளில் மருத்துவ காப்பீடு தொகை எதுவும் செலுத்தப்பட்டதாக குறிப்புகள் இல்லை. மனுதாரரின் வேண்டுகோளுக்கிணங்க ரூ.5400/ மட்டும் மேற்படி தொகையிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்டது.

**மறு விசாரணை:-இல்லை.**

**ஒப்பம்/-கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**